DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 4 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 3** |
| **Name** | **:** | சுப்ரமணி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**29.10.2025**

**முதல் விசாரணை:**

நான் கப்பத்துரை கக்கஞ்சி காலணியில் குடியிருக்கிறேன், நான் கூலி வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி பாத்திமா, 2ஆம் எதிரி சாகுல்அமீது மற்றும் 3ஆம் எதிரி உமர் என்ற முகமது உமரை பார்த்திருக்கிறேன், ஆனால் அவர்களை எனக்கு தெரியாது. அ.சா.1 முருகனையும், கிட்டானையும் எனக்கு தெரியும். தற்போது கிட்டான் இறந்துவிட்டார். எனக்கு எதுவும் தெரியாது, போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் கேட்டார்கள், நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில்

இருக்கும் 1வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் மட்டும் Exhibit P2, என் Exhibit P2 கையொப்பம் உள்ள ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பது எனக்கு தெரியாது, அதில் என்கூட ராமசந்திரன் கையொப்பம் போட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் இருக்கும் 1வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் மட்டும் Exhibit P3, என் Exhibit P3 கையொப்பம் உள்ள ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பது எனக்கு தெரியாது, அதில் என்கூட ராமசந்திரன் கையொப்பம் போட்டார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அனுமதி அளித்தது, அதன்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் போலிசார் விசாரணையில் 10.4.2022ஆம் தேதி மதியம் 2.00 மணிக்கு போலிசார் என் முன்னிலையிலும், ராமசந்திரன் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும், வரைபடமும் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் நானும், ராமசந்திரனும் கையொப்பம் இட்டோம் என்றும், பிறகு போலிசார் அன்றே மதியம் 2.45 மணிக்கு என் முன்னிலையிலும், ராமசந்திரன் முன்னிலையிலும் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 3 அடி நீளமுள்ள சிறிய இரும்பு பைப் ஒன்றை கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல்

மகசரிலும் நானும், ராமசந்திரனும் கையொப்பம் இட்டோம் என்றும், சொல்லிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானம் ஆகி விட்டதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், நான் பொய் சாட்சி சொல்லவில்லை.

**1,2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**இல்லை.**

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.10.29 17:30:07 +0530